மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 49/2022 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | வேலு | நாள் | 24.03.2025 |
| தகப்பனார் பெயர் | முத்துக்கவுண்டர் | | |

**8 ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

16) தாவா சொத்துக்கள் பாகம் பிரியாத கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என நான் சொல்லியுள்ள நிலையில், 8 ம் பிரதிவாதியை தவிர வேறு யாருக்கும் கிரயம் செய்து கொடுக்கவில்லை என்றால், சரிதான். 7 ம் பிரதிவாதி சித்தையன் எனக்கு என்ன உறவுமுறை என்றால், என் தந்தை வழியில் பங்காளி உறவு வேண்டும். என் பாட்டனார் பெயர் என்னவென்றால், வீரப்ப கவுண்டர் ஆகும். சித்தையன் என்பவரது பாட்டனார் பெயர் என்னவென்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

17) மேற்படி வீரப்ப கவுண்டரும், சித்தையனின் தந்தையும் உடன் பிறந்த சகோதரர்களா என்றால், ஆமாம். என் பாட்டனாருக்கும், மேற்படி சித்தையன் என்பவரது பாட்டனாருக்கும் ஏதேனும் சொத்துக்கள் கூட்டாக பாத்தியப்பட்டிருந்ததா என்றால், அது குறித்து எனக்கு சரியாக தெரியவில்லை. அவ்வாறு மேற்படி சித்தையன் குடும்பத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் கூட்டாக சொத்துக்கள் எதுவும் பாத்தியப்பட்டுள்ளதா என்பது குறித்தே எனக்கு தெரியாத நிலையில், எதற்காக மேற்படி சித்தையனை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால், நான் இவ்வழக்கில் சித்தையனை சேர்க்கவில்லை. அவருக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை.

18) தற்போது என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் 7 ம் பிரதிவாதியாக சித்தையன் என்பவரை நான் சேர்த்துள்ளேன் என்றால், சரிதான். அவ்வாறு 7 ம் பிரதிவாதிக்கும், இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என நான் சொல்லும் நிலையில், எதற்காக அவரை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்பதற்கான முறையான காரணத்தையும், நான் சொல்லாத நிலையில், என் வழக்கு தவறானது என்றால், சரியல்ல. 1 ம் பிரதிவாதி மாதேஷ் எனக்கு என்ன உறவு என்றால், அவர் என் சகோதரர் ஆவார். அவர் உடன் பிறந்த சகோதரரா என்றால், இல்லை. என் தந்தையின் முதல் மனைவி வழி மகன்

ஆவார். மேற்படி மாதேஷ் என்பவர் தாவா சொத்து குறித்து யாருடனாவது கிரய ஒப்பந்தம் அல்லது அடமானம் போன்றவை செய்துள்ளாரா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

19) தாவா சொத்தை பொறுத்து நான் யாருடனாவது கிரய ஒப்பந்தம் அல்லது அடமானம் போன்றவை செய்துள்ளேனா என்றால், என் உடன் பிறந்த சகோதரி வளர்மதியிடம் தாவா சொத்தை அடமானம் வைத்து ரூ.50,000/- கடன் பெற்றிருந்தேன். என் சகோதரியிடம் தாவா சொத்தை பொறுத்து நிபந்தனைக்குட்பட்ட கிரய அடமானம் வைத்துள்ளேன் என்றால், சரிதான். எந்த வருடத்தில் மேற்படி அடமானம் ஏற்படுத்தப்பட்டது என்றால், சுமார் 10 வருடங்களுக்கு மேல் இருக்கும். குறிப்பாக தேதியும், ஆவண எண்ணும் நினைவில்லை. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால், நீதிமன்றம் கோரினால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

20) மேற்படி நிபந்தனை அடமானத்தில் என்னுடைய பாகத்தின் மதிப்பு எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், மதிப்பு காட்டவில்லை. ஆனால், அது சுமார் 10 சென்ட் நிலம் இருக்கும். அவ்வாறு மேற்படி என் பாகத்தை பொறுத்து எனக்கு பாத்தியப்பட்டதாக நான் ஒப்புக்கொண்டு, என் சகோதரியிடம் நான் அடமானம் வைத்துள்ள நிலையில், தற்போது தாவா சொத்து பாகம் பிரியாத கூட்டுக்குடும்ப சொத்து என கூறி நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது செல்லாதது என்றால், சரியல்ல.

21) 20.03.2009 ம் தேதியில் நான், 1 ம் பிரதிவாதியுடன் ச.எண்.307/16C ல் உள்ள 6 சென்ட் நிலத்தை பொறுத்து ஒரு விற்கிரய ஒப்பந்தம் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி தேதியில் நான் 1 ம் பிரதிவாதியுடன் விற்கிரய ஒப்பந்தம் செய்து கொண்டு, தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. ச.எண்.307/16 ல் உள்ள 1308 சதுரடி நிலம் குறித்து மேற்படி 1 ம் பிரதிவாதி ராஜா என்பவருடன் கடந்த 30.06.2004 ம் தேதியில்

கிரய ஆவண எண்.1675/2004 ன் படி கிரயம் செய்துள்ளார் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

(8 ம் பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.